# ஞானபானு ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் பெற்ற ஞான தேகம்


சிவத்தமிழ் குகமணி

தெ.தனபால்

Email : thiruppalli@yahoo.com Cell : 9444958526


பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் பாடியருளிய பாடல்களுள் "திருத்தொடையல்" என்னும் முப்பது பாடல்கள் அடங்கிய பகுதியும் ஒன்றாகும். இது ஒரு சிறு பிரபந்தம். அறுமுகன் பெருமையை அழகுற விளக்கும் அரிய பிரபந்தம் ஆகும். பெருமானின் பேரறிவு, ஐந்துமுகச் சிவமே ஆறுமுகச்சிவமாக இருத்தல், சிவபெருமானுக்குப் புதல்வன் எனல் வெறும் உபச்சாரம், குலக்கடவுள், செஞ்சோதி, அடியார் உள்ளமே அவன் இருக்கை போன்ற பலப்பல அற்புதமான செய்திகள் இப்பிரபந்தத்தில் பொதிந்துகிடக்கின்றன. திருத்தொடையல் என்னும் இப்பிரபந்தத்தில் எவரும் சிந்திக்காத முறையில் சுவாமிகள் கூறுவது யாதெனில், நமக்கு மூன்று வித வேதியியல் மாற்றங்கள் உடம்பில் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. ஒன்று சுத்ததேகம், பிறிதொன்று பிரணவதேகம், மற்றொன்று ஞானதேகம் என்று மூன்று உடம்புகளாக நம் தேகத்தை மாற்றலாம். அதற்குரிய சாதனைகளையும் அவற்றின் பயன்களையும் விவரிக்கின்றார். நடை மிகத் தெளிவாக உள்ளது. பொருத்தமான மேற்கோள்களும் காட்டியுள்ளார். நிட்களானந்த குகன் என்னும் பதிகப் பாடல் ஒன்றால் அடியார்கள் பலர் எப்படி முத்தி அடைந்தார்கள் என்பதையும் விளக்கியுள்ளார். நம் தூல தேகத்தை ஞான தேகமாக மாற்றும் ரகசியத்தை நமக்கு மிகவும் இனிமையாக விளக்கிக் காட்டியவர் சுவாமிகள் ஆவார்.

இன்றைய இயந்திர உலகில் எந்த ஒரு விஷயத்தைப் பற்றியும் முழுமையாகத் தெரிந்து கொள்வதில்லை. அப்படி யாராவது நமக்குத் தெரிவித்தாலும் அதை நாம் தெரிந்து கொள்ளும் அளவுக்குப் பொறுமையின்றி, அவசரமாக ஓர் இலக்கில்லாமல் போய்க் கொண்டிருக்கிறோம். அதிலும் குறிப்பாக ஆன்மிக விஷயமென்றால் குளிக்கச் சென்று சேறு பூசிக் கொண்டு வந்ததைப் போன்ற நிலையில் தான் இருக்கிறோம். அப்பாவி பக்தர்களின் இந்தப் பரிதாபமான நிலையைப் பயன்படுத்திக் கொண்டு புற்றீசல் போல் பெருகி வரும் போலிச் சாமியார்களும், போலிச் சோதிடர்களும் "உங்கள் தோஷத்தை நீக்குகிறேன், குண்டலினியை எழுப்புகிறேன், கபாலம் காட்டுகிறேன், தீக்ஷை தருகிறேன்" என்று போட்டி போட்டுக்கொண்டு பக்தர்களைச் சுரண்டி இழுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை நமக்கு ஏற்படாமல் இருக்க வேண்டுமானால் நம் நாட்டில் தோன்றிய ஞானிகள் அருளிச் செய்த பாடல்களைப் பொருளுணர்ந்து படித்தவற்றில் உள்ள கருத்துகளை நாம் புரிந்து கொண்டு செயல்பட வேண்டும். எப்படி செய்ய வேண்டும், அப்படி நாம் தெரிந்து கொள்வதால் நாம் எதை அடைய முடியும் என்பதைப் பற்றியெல்லாம் நம்முடைய பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள், தாம் இயற்றிய பாடல்களில் தெளிவாகவும் விரிவாகவும் கூறியுள்ளார்.

**"ஞான தேகம்"**

ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் வாழையடி வாழை என வந்த ஞானிகள் வரிசையில் கடைசியாகத் தோன்றியவர் ஆவார். அவர் இயற்றிய 6666 பாடல்களில் மிகச் சிறந்த சாத்திரங்களையும் தோத்திரங்களையும் அருளியதோடு ஆறுமுகச்சிவனை அடையும் வழிகளைப் படிப்படியாக விளக்கமாக அருளிச் செய்திருக்கிறார்கள். அவற்றுள் "தகராலய ரகசியம்" "பரிபூரணானந்த போதம்" "திருப்பா" போன்றவை மிக மிக



அற்புதமானவையாகும். அதே போல் 30 பாடல்களைக் கொண்ட "திருத்தொடையல்" சிறப்பான பதிகமாகும். தொடையல் என்பதற்கு தொடுப்பது என்பது பொருள் ஆகும். அதாவது ஒரு பூவுடன் மற்றும் ஒரு பூ சேர்த்து தொடுத்து மாலை உருவாக்குவது என்பதாகும். திரு என்பது இப்பதிகத்திற்கு அடை மொழியாகும். இப்பதிகம் ஒரு மாலையாகக் கோத்து பாமாலையாக முருகனுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இப்பதிகத்தின் பொருளுணர்ந்து, சிந்தித்து, தெளிவடைவதன் மூலம் மிகப்பெரும் ஆன்ம லாபத்தை அடைய வேண்டியது அவசியமாகும். ஆன்மலாபத்தின் மிக உயர்ந்த நிலை ஞான தேகம் அடையும் மரணமிலாப் பெருவாழ்வு ஆகும். "ஞான தேகம்" என்பதைப் பற்றிச் சிந்திப்பதற்கு இப்பதிகத்தில் உள்ள மிகச் சில பாடல்களில் உள்ள சில வரிகளை மட்டும் தான் நான் எடுத்துக் கொண்டிருக்கிறேன். நம் சுவாமிகளின் கருத்தை ஒட்டியுள்ள மற்ற ஞானிகளின் கருத்துகள் நமது சிந்தனைக்கு வலிமையூட்டும் என்பதால் அவற்றையும் எடுத்துக் கொண்டுள்ளேன்.

**வேண்டுகோள்:-**

நான் குறிப்பிட்டுள்ள என் கருத்து அடியார் பெருமக்களுக்கு ஏற்புடையதாக இருப்பின் அப்பெருமை நம் குருநாதர் சுவாமிகளையே சாரும். மாறாக இருப்பின் மன்னிருத்தருளுமாறு மிக்க அன்புடன் உங்களை வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன்.

**"ஒளி வெளியிலிருப்பதைப் பார்ப்பது சரியா?" அல்லது "ஒளி உள்ளிருப்பதை உணர்வது சரியா?"**

சுவாமிகள் இப்பதிகம் பாடும் போது "கவிக்கொரு கற்பூர தீபம் ஏற்றுக" என்று குறிப்பிட்டுள்ளார். கற்பூர தீபம் ஏற்றுவதன் காரணத்தை நாம் உணர்ந்தால்தான் சுவாமிகளின் குறிப்பை நாம் புரிந்து கொள்ள முடியும். பழைமையான திருஅருள் கூடிய ஆலயங்களில் கருவறையில் உள்ள இறைவனின் திருவுருவை நம்மால் தெளிவாகக் காண முடியாதபடி இருளாக இருக்கும். அதே நேரம் அங்கிருக்கும் அர்ச்சகர் பூசையின் முடிவில் கற்பூர தீபமேற்றி அந்த ஒளியில் இறைவனது திருவுருவை நமக்குத் தெளிவாகக் காணுமாறு செய்வார். இந்த நிகழ்ச்சி புறத்தே நடப்பதாகும். அதே போல் அகத்தில் நமது மனக்குகையில் உள்ள இறைவனை நாம் காண முடியாதவாறு மும்மலங்களாகிய இருள் மறைத்திருக்கிறது. இந்த மாய இருளைத் திருத்தொடையலில் உள்ள ஒவ்வொரு பாடலையும் உண்மையான அன்புடன் பொருளுணர்ந்து ஓதி நமது மனக்குகையில் தெளிவு என்ற தீபத்தை ஏற்றுவதன் மூலம் மாய இருளை அகற்றி நம் உள்ளத்தில் உள்ளே உள்ள முருகனைக் காணலாம் என்று



சுவாமிகள் அருளிய குறிப்பின் மூலம் உணரலாம்.

மிக உயர்ந்த நிலையான ஞானதேகமாகிய மரணமிலாப் பெருவாழ்வை அடைவற்கு நாம் உடலாலும் மனத்தாலும் நம்மைச் சுத்தப்படுத்திக் கொள்வது தான் முதல் நிலையான சுத்ததேகம் என்பதாகும். இந்த நிலையில் தொடர்ந்து சென்று அதன் முடிவில் பிரணவ தேகத்தை அடையவேண்டும். மேலும் தொடர்ந்து சென்று முடிவில் இறுதியான மூன்றாம் நிலையான ஞானதேகத்தை அடைவது தான் சாகாக்கல்வி எனப்படும் மரணமிலாப் பெருவாழ்வு ஆகும். இந்த நிலையை அடைவதைப் பற்றி திருத்தொடையலில் உள்ள சுவாமிகளின் கருத்தைப் படிப்படியாகச் சிந்திப்போம்.

"அனந்தமறை யுன்னறிவாய் விளங்கவென
வாறுமுக வடிவே காட்டித்
தனந்தனியா வந்தசிவ சரவணனே சாமீ யுன்றன்
**மனங்கனிய யானொழுகும்**
**வகையுணர்ந் தெனையறிய வரமீந் தென்னைக்**
கனம்படவும் வைப்பதுநின் கடனேநின்
கடனேயென் றனுதினமுங் கருதாநின்றேன்".

"உந்தன் மனம் கனிய யான் ஒழுகும் வகை உணர்ந்து" என்ற இந்த வரிதான் ஞான தேகமாகிய "மரணமிலாப் பெருவாழ்வை" அடைவற்கு ஆதாரமான அடிப்படையான முதல் படியாகும். அதாவது இறைவா உனது மனம் கனியக்கூடிய வகையை நான் உணர வேண்டும் என்று சுவாமிகள் இறைவனிடம் கேட்கிறார். இது மிக மிக முக்கியமானது என்பதால் சற்று விரிவாகச் சிந்திப்போம்.

இறைவனது மனம் கனிய வேண்டுமானால் முதலில் நம்முடைய மனம் அவனை நினைந்து நினைந்து அன்பால் கரைந்து உருக வேண்டும். அந்த அன்பு, சுவாமிகள் "குமரவேள்பதிற்றுப் பத்தந்தாதி" யில் கூறியது போல "வாழேனோ ஆனந்தமான கண்ணீர் வடியேனோ படியேனோ" என்று அன்பால் கரைந்து நமது கண்களில் ஆனந்தமான கண்ணீர் வழிந்து நம் உடல் முழுக்க நனைய வேண்டும் என சுவாமிகள் கூறுகிறார். மேற்சொன்ன அன்பு சுவாமிகளின் மானசீக குருவான அருணகிரியார் கந்தர் அலங்காரத்தில் "அராப்புனை வேணியன் சேயருள் வேண்டும். **அவிழ்ந்த அன்பால்** குராப்புனை தண்டையந்தாள் தொழில் வேண்டும்" என்று முருகனிடம் வேண்டுகின்றார். திருவாசகத்தில் மாணிக்கவாசகப் பெருந்தகை "அன்பெனும் ஆறு கரையதுபுரள, நன்புலன் ஒன்றி நாதா என்றரற்றி, உரை தடுமாறி உரோமம் சிலிர்ப்ப, கரமலர் மொட்டித்து இருதயம் மலர" என்று இறைவனிடம் நம் அன்பு கறைபுரண்டு ஓடும்படி இருக்க வேண்டுமெனத் தெளிவாகக் கூறுகிறார். மேலும் மாணிக்கவாசகர் நாம் இறைவனை அடைய சிறந்த ஒரு வழியைக் கூறுகிறார். "யானே பொய்என் நெஞ்சும் பொய். என் அன்பும்பொய். ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே" என்றும் "உற்றாரையான்

வேண்டேன் ஊர்வேண்டேன் பேர் வேண்டேன் கற்றாறையும் யார் வேண்டேன்; கற்பனவும் இனியமையும் குற்றாலத்தமர்ந்துறையும் கூத்தா! உன் குரை கழற்கே கற்றாவின் மனம் போல் கசிந்துருக வேண்டுவனே" என்ற இந்த வரியில் நாம் சிந்திக்க வேண்டுவது என்னவென்றால் இப்படியெல்லாம் அழுது அழுது நம் உடலை உருக்கினால்தான் நமது மனக்குகையில் சோதி வடிவமாக உள்ள இறைவனைத் தரிசிக்கலாம். இதைத்தான் ''ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி'' என மாணிக்கவாசகர் பாடுகிறார்.

தர்மமிகு சென்னை என்று வருணித்த வள்ளல் பெருமானார் "நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே நிறைந்து நிறைந்து ஊற்றெழும் கண்ணீரதனால் உடம்பு நனைந்து நனைந்து அருளமுதே நன்னிதியே ஞான நடத்தரசே என் உரிமை நாயகனே" என்று ஆன்மிகத்தின் எல்லையை நமக்கு உணர்த்துகிறார்.

திருமூலர் அருளிய திருமந்திரத்தில் "என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப் பொன்போல் கனலில் பொரிய வறுப்பினும் அன்போடு உருகி அகம் குழைவார்க்கன்றி என்போல் மணியினை எய்த ஒண்ணாதே'' என்று பாடியுள்ளார். இதன் உட்பொருள்யாதெனில் ஒருவன் தன்னுடைய எலும்புகளை உடைத்து விறகாக்கிக் கொண்டு, தன்னுடைய தசைகளை அறுத்து இறைச்சியாகப் பொன் நிறமாக தீயில் வறுத்து இறைவனுக்குப் படைத்தாலும் அவனால் இறைவனை அடையமுடியாது. அதே நேரம் இறைவனை நினைத்து அன்போடு உருகி அகம் குழைந்தால் அவன் அன்பிற்குப் பாத்திரமாகலாம் எனத் திருமூலர் விளக்கமாகக் கூறுகிறார். இத்தகைய முழுமையான அன்பு நிலையில் நாமும் உருகி அதன் மூலம் இறைவனையும் உருகவைப்பதால் நம்முடைய அகம், புறம் இரண்டும் தூய்மை அடைகின்றன. இதுதான் முதல் நிலையாகிய சுத்ததேகம். இதைத்தான் "காரியம் ரூபத்தோடு கூடிய சுத்ததேகி" என்றார் வள்ளலார்.

இந்நிலையை அடைந்தபிறகு இதற்கு அடுத்த படியான நிலையாகிய தன்னையறிந்திடும் தத்துவ ஞான நிலையை சுவாமிகள் அடுத்த வரியில் கூறுகிறார். "எனையறியும் வரமீந்து" என்று தன்னைத்தான் அறியக் கூடிய மிக மேலான வரத்தை இறைவனிடம் எனக்குத் தரவேண்டும் எனக் கேட்கிறார். மேற்கண்ட வரி மிகவும் சிந்திக்கத்தக்கது. நாம் அன்பால் இறைவனை நினைந்து உருகினால்தான் இறைவனுடைய மனம் கனியும் என்பதை உணர்ந்து அன்பு நெறியாகச் சென்று அன்புருவமாக மாறுவது நமது முயற்சியாகும். இந்த நிகழ்ச்சி பூரணமான நிலையில் ஒருவனுக்கு தன்னைத் தான் அறியும் உயர்ந்த ஞானத்தை இறைவன் வரமாகத் தருவான் என்றும், அந்த வரத்தை சுவாமிகளும் பெற்றார் என்றும் நாம் அறிதல் வேண்டும்.

ஔவையார் தாம் அருளிய விநாயகர் அகவலில் "என்னையறிவித்து எனக்கருள்" செய்யவேண்டுமென தன்னை அறிந்திடும் வரத்தைக் கேட்கிறார் என்பதை நாம் நினைவு கொள்ளவேண்டும். திருமூலர், திருமந்திரத்தில் "தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை, தன்னை யறியாமல் தானே கெடுகின்றான், தன்னை அறியும் அறிவை அறிந்த பின், தன்னை அர்ச்சிக்கத் தான் இருந்தானே" என்று தன்னை அறியும் ஞானத்தின் சிறப்பையும் விளக்கமாகக் கூறுகிறார். இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது யாதெனில் **"ஒளி உள்ளிருப்பதை உணர்வது சரியே" "ஒளி வெளியிருப்பதைப் பார்ப்பது ஒரு நிமிட மகிழ்ச்சிதான்"** இந்த மகிழ்ச்சி இனிய தீபாவளி நாளில் நம் வீட்டுக் குழந்தைகளுக்கு மட்டும்தான். ஒளி உள்ளிருப்பதை உணர்ந்தால் அந்த இன்ப நிலை "பிரணவ தேகம்" ஆகும்.

சுவாமிகள் முதலில் அன்பினால் தான் கரைந்து அதன் மூலம் முருகனின் மனத்தைக் கனியச் செய்தார். இதனால் சுவாமிகள் முதலில் தன்னைத்தான் முழுமையான உணர்ந்து அதன் மூலம் முருகனை உணர்ந்தார். இந்த நிலையை அடைந்த சுவாமிகளுக்கு அண்ட சராசரங்களும் அதற்கு அப்பாலும் அணுவுக்கும் அணுவாய் உள்ள அனைத்தும் தெள்ளத் தெளிவாய் தன்னை அறிந்த ஞானத்தின் மூலம் தெரிந்தது என்பதை சுவாமிகள் திருத்தொடையல் 8ஆம் பாடலில் "அண்டமுத லணுக்கடையாய்க் கண்டசரா சரங்களெலா மருளா முன்றன், பண்டமெனத் தெரிதலினாலுனக்கிவணா னிசைக்கவொரு பரிசுங் காணேன்" என்ற வரிகளுக்கு பொருள் விளங்குமாறு சுவாமிகள் வாழ்ந்தார்கள். இந்த நிலையை அடையச் சுவாமிகள் உடலாலும் உள்ளத்தாலும் மிகச் கடுமையாக உழைத்தார்கள் என்பதை நாம் அவருடைய வரலாற்றின் மூலம் உணரலாம். அசுத்ததேகத்தை உடைய நாம் நம்முடைய உணவில் உப்பு, புளி, காரம் என்ற மூன்றையும் அல்லது இவற்றுள் ஒன்றையாவது தினமும் உணவில் சேர்த்துக் கொள்கிறோம். இந்த மூன்று சுவையும் அற்ற உணவைத் தள்ளி ஒரு நாளைக்கு உச்சிப் பொழுதில் மட்டும் உப்பு, புளி, காரம் அற்ற சுத்த அன்னத்தை ஒரு பிடி மட்டும் உண்டு உணவால் தன்னுடைய உடலையும் அன்பால் உருகி தன் உள்ளத்தையும் சுத்தமாக்கி முதல் நிலையான சுத்த தேகத்தை அடைந்தார்கள். அந்த நிலையில் மேலும் கடுமையாக உழைத்து அதன் முடிவில் பிரணவ தேகத்தையும் பெற்றார்கள். இதைத் தான் "காரண காரிய ரூபாரூபம் முதலியவற்றுடன் நின்ற பிரணவதேகி" என்றார் வள்ளலார்.

"அண்டம் சுருங்கில் அதற்கோர் அழிவில்லை, பிண்டம் சுருங்கில் பிராணன் நிலைபெறும், உண்டி சுருங்கில் உபாயம் பல உள, கண்டங் கறுத்த கபாலியும் ஆமே" என்னும் திருமந்திரப் பாடலில் திருமூலர் உணவின் மூலம் நம் உடல் சுருங்குவதால் உடலுக்கும் உயிருக்கும் அழிவில்லை என்பதை மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

இத்தகைய பிரணவதேக நிலையை எய்திய சுவாமிகள் பூரண நிலையான மூன்றாம் நிலையாகிய ஞான தேகத்தை அடைவது பற்றி திருத்தொடையலில்

பன்னிரண்டாம் பாடலில் மிகவும் அற்புதமாக விளக்கியுள்ளார் "நின்மலச்செஞ் சோதிவடி வுடையவனை யனவரத நினைப்போர்க் கென்றும் பொன்மயச்செம் மேனியுடம் புன்டாகும் நரைதிரைகள் பொருந்தா புண்கண்", இத்தகைய "செஞ்சோதியை" "அனவரதம்" அதாவது அல்லும் பகலும், இமைப் பொழுதும் தம் உள்ளத்தை விட்டு நீங்காமல் நினைப்பவர்க்கு அந்தச் சோதி சுவாமிகளுடைய உள்ளத்தில் மலர்ந்து பிரகாசிக்கும். இத்தகைய சோதியை இடைவிடாமல் வழிபடுபோது அந்தச் சோதி சுவாமிகளுடைய உள்ளத்தில் மலர்ந்து பிரகாசிக்கும். இத்தகைய சோதியை இடைவிடாது வழிபடும்போது அந்தச் சோதி முதலில் உள்ளத்திலும் பிறகு உடல் முழுவதும் சுடர் விட்டுப் பிராகாசிக்கும். இந்த நிலையை அடைந்தவர்கள் உடலிலும், கண்களிலும் ஞானஒளி பிரகாசிக்கும். அப்போது அந்த உடலில் இறைவன் அருளால் அற்புதமான வேதியியல் மாற்றங்கள் நிகழும். இந்த மாற்றம் நிகழ்ந்த உடலுக்கு இயற்கையாக ஏற்படக்கூடிய நரையும், தோலில் ஏற்படும் சுருக்கமாகிய திரையும் தோன்றாது. இந்த நிலையை அடைந்த உயிருக்கு மரணமில்லை. அதனால் அந்த உடல் அழிவதும் இல்லை. இதுதான் "சாகாக்கல்வி" "முத்தேக சித்தி" என்று கூறப்படும். "மரணமில்லாப் பெருவாழ்வு" என்று சொல்லக்கூடிய ஞான தேகமாகும். காலனை வெல்லக்கூடிய மிகப்பெரிய இத்தகைய சாமர்த்தியமான மாற்றத்தை சுவாமிகளுடைய உடலில் முருகப் பெருமான் ஏற்படுத்தியதை உணர்த்தும் வண்ணம் முருகனை இப்பாடலில் இறுதியில் "சமர்த்தா" என அழைக்கின்றார், நமது சுவாமிகள். இறுதி நிலையான "ஞான தேகத்தை" முருகன் அருளால் பெற்றார்கள் என்பதை மேற்கண்ட பாடல் உறுதி செய்கிறது.

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் சிவஞானிகளின் வாழ்க்கை முடிவினை மூன்று வகையாகப் பிரித்துரைக்கிறார். ஆன்மாவானது வினைகளிலிருந்து விடுபட்டு பருவுடலை நீத்து, தெய்வத்திருவருளில் கலக்கும் நெறி ஒன்று உண்டென்பதற்கு, அத்தகு நிலையினை அடைந்த ஏனாதி நாயனார், மெய்ப்பொருள் நாயனார், பெருமிழலைக் குறும்ப நாயனார் ஆகிய அடியார்களை சான்றுகளாக சுவாமிகள் அருளிய முதல் மண்டலத்தில் உள்ள நிட்களானந்த குகன் என்ற பதிகத்திலுள்ள 6ஆவது பாடலில் காட்டுகிறார். பூத உடம்பொடு இறையருளில் கலக்கும் நெறி உண்டென்பதற்கு, சுந்தரமூர்த்தி சுவாமிகள் சான்று. பூத உடலொடு சோதியில் கலக்கும் நெறி உண்டென்பதற்கு திருஞானசம்பந்தப்பெருமான் சான்று. உடம்பொடு சிவலிங்கத்துடன் ஐக்கியமானதாக திருநாவுக்கரசரைச் சொல்லுகின்றார். உடம்பினை மாற்றிக் கொண்டு சிவத்தொடு சேர்ந்ததற்கு நந்தனாரைக் கூறுகின்றார். பருவுடல் கொண்டே பரம் பொருளுடன் ஐக்கியப்பட்டதற்கு வாதவூரரைச் சான்று காட்டுகின்றார்.

இப்படி பல்வேறு நெறிகளைச் சொல்லி, அவற்றுள் தமக்கு ஏது வருமோ என்று ஏங்கி, ஞான தேகமாகிய மரணமிலாப் பெருவாழ்வைப் பெற வேண்டும் என்ற விருப்பத்தை இப்பாடலில் சொல்லாமல் சொல்கிறார். இந்தச் செய்தியை திரு.ம.பொ.சி. அவர்கள் எழுதிய "வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு" என்ற நூலில் நாம் காணலாம்.



## ஆன்மிகப் பாதையில் செல்லும் சண்முக கவசம் படிக்கும் நேயர்களுக்கு ஒரு புதிய நற்செய்தி

**சண்முக கவசம் இதழில் வரும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் செய்திகள் தாங்கள் எப்போது வேண்டுமானாலும் படித்துக் கொள்ள இன்றைய விஞ்ஞானத் துறையில் மிகப் பெரிய வசதியை நாம் பெற்றுள்ளதால் இனிமேல் தாங்கள் கீழ்வரும் இணைய தளத்தில் படித்துத் தெரிந்துகொள்ள நமது குழுக்களில் உள்ள ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி மன்றம் இதைச் செய்ய முன் வந்துள்ளது என்பதை நாங்கள் தங்களுக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அந்த இணைய தளத்தின் பெயர் பின்வருமாறு :**

**www.pambanswamigal.net or www.pambanswamigal.org**

மேலும் விவரங்களுக்கு : **Email: thiruppalli@yahoo.com or 94449 58526**